23—

பிரிவு அலுவலகம்

***3025—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் நெடுஞ்சாலைத் துறையின் புதிய பிரிவு அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் உட்கோட்டத்தில் பராமரிக்கப்பட்டு வரும் சாலையினுடைய நீளம் 530 கிலோ மீட்டர் தூரம் ஆகும். அந்த 530 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலையைப் பராமரிப்பதற்கு சேந்தமங்கலத்தில் ஒரு பிரிவு அலுவலகம் மட்டுமே இயங்குகிறது. அதேநேரத்தில், அதை ஒட்டியிருக்கிற மலைப் பிரதேசமான கொல்லிமலையில் 190 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளும் நேரடியாகப் பராமரிக்கப்படுகின்றன. கொல்லிமலைக்கு பல்வேறு காலங்களில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் செல்கின்றனர். மழைக் காலங்களிலே மண் சரிவு ஏற்படுகிறது. அதனால், அங்கே ஒரு பிரிவு அலுவலகம் இருக்குமேயானால், உடனுக்குடன் சாலைகளைப் பராமரிப்பதற்கு வசதியாக இருக்குமென்று, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள் ஏற்கெனவே என்னிடத்தில் ஒரு கடிதம் தந்தார்கள். எனவே, அதை மையப்படுத்தி, அங்கே புதியதாக ஒரு பிரிவு அலுவலகத்தை உருவாக்கலாம் என்ற ஒரு கருத்துரு அரசிடம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, இந்த நிதியாண்டிலேயே அங்கே நெடுஞ்சாலைத் துறையின் பிரிவு அலுவலகத்தைத் திறப்பதற்கு அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

2023 ஜனவரி 13]

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையானது மலைப் பகுதியாகும். அங்குள்ள சுமார் 190 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையைப் பராமரிக்க வேண்டுமென்றால், சேந்தமங்கலம் நெடுஞ்சாலைத் துறை அலுவலகத்திலிருந்து மலைப் பாதையிலே நீண்ட தூரம் சென்று பராமரிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதனால், மலைவாழ் மக்களுடைய நலன் கருதி, கொல்லிமலைப் பகுதியை மையமாகக் கொண்டு, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக புதிய பிரிவு அலுவலகம் அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொன்னதை அவர் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். சேந்தமங்கலத்தைப் பொறுத்தளவில், ஏற்கெனவே அங்கு ஒரு பிரிவு அலுவலகம் இருக்கிறது. அதையொட்டித்தான் கொல்லிமலை இருக்கிறது. கொல்லிமலையில் 190 கிலோ மீட்டர் தூரம் நீளமுள்ள சாலை பராமரிக்கப்பட்டு வருகிறது. மழைக் காலங்களில் மண் சரிவு ஏற்படுகிறது. சுற்றுலாப் பயணிகள் சென்று வருவதற்கு இடையூறாக இருக்கிறது என்பது குறித்து அவர் ஏற்கெனவே என்னிடத்தில் கடிதம் கொடுத்ததன் அடிப்படையில், அங்கே புதிதாக ஒரு பிரிவு அலுவலகத்தை உருவாக்குவதற்கு இப்போது கருத்துரு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு, இந்த நிதியாண்டிலேயே அது துவக்கப்படும் என்று மீண்டும் ஒரு முறை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள், நன்றி சொல்லி அமருங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டம் புதிதாக உருவெடுத்த பிறகு, கல்வராயன்மலையில் இருக்கின்ற வெள்ளிமலை ஊராட்சி ஒன்றியம் வட்டமாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. புதிய வட்டமாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கின்ற கல்வராயன்மலையில், நம்முடைய கழக ஆட்சியில் சென்ற ஆண்டு உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அங்கே ஆய்வு மாளிகை கிடையாது. கள்ளக்குறிச்சியில்தான் இருக்கிறது. அதைக்கூட புதிதாகக் கட்டுவதற்கான இடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டிருக்கிறார்கள். அதையொட்டிய கல்வராயன்மலையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களோ, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அதிகாரி பெருமக்களோ வந்து தங்குவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, கல்வராயன்மலையில் ஓர் ஆய்வு மாளிகையை உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்வதோடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். (குறுக்கீடு) துணைக் கேள்வி, அவ்வளவுதான்.

திரு. தா. உதயசூரியன்: ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். நான்கு அறைகளைத்தான் கட்டிக் கொடுப்பதற்கு விதி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, மலைப் பகுதியாக இருப்பதனால், விதியைத் தளர்த்தி, கூடுதலாக இரண்டு அறைகளைச் சேர்த்து இந்த நிதியாண்டிலேயே கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஜனவரி 13]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன்மலைப் பகுதியில் இப்போது புதிதாக தாலுகா அலுவலகமெல்லாம் உருவாக்கப்பட்டுவிட்டன. இன்னும் சொல்லப்போனால், அங்கே நீதிமன்றம்கூட வந்துவிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோ அல்லது சிறப்பு விருந்தினர் என சொல்லப்படும் மாண்புமிகு அமைச்சர் அவர்களோ, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களோ மலைக்கு மேலே சென்றால், அங்கே தங்குவதற்கு வசதி இல்லை என்பதை நானே நேரடியாகப் பார்த்து அறிந்தேன். அந்த மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக நான் இருக்கின்ற காரணத்தால், பொதுப் பணித் துறை மூலமாகவோ அல்லது நெடுஞ்சாலைத் துறை மூலமாகவோ அங்கே புதிதாக தங்கும் வசதி செய்து தர வேண்டுமென்று அறிந்த காரணத்தினால், அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறேன். அவர்களுடைய அனுமதியைப் பெற்று, இந்த நிதியாண்டிலேயே, அங்கே தங்கும் வசதி செய்து தருவதற்கு அரசின் சார்பாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கள்ளக்குறிச்சி நகராட்சிப் பகுதியிலே வெளிவட்டச் சாலை–*Ring Road *அமைக்கும் பணி மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கள்ளக்குறிச்சி நகராட்சியில் நாளுக்கு நாள் மக்கள்தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இது மாண்புமிகு பொறுப்பு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அங்கு நிறைய சிக்கல்கள் ஏற்படுகின்றன. கரும்பு* load *எல்லாம் கள்ளக்குறிச்சியின் மையப் பகுதிக்குள்ளே வந்து செல்வதால், இட நெருக்கடி மற்றும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, வெளிவட்டச் சாலை–*Ring Road *அமைக்கும் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் ஸ்டாண்டிலிருந்து துருகம் செல்கின்ற சாலை மற்றும் பஸ் ஸ்டாண்டிலிருந்து சின்ன சேலம் செல்கின்ற சாலை நம்முடைய துறையின் வசம் இல்லை; அவை NHAI *வசம் இருப்பதாலேயே, அந்த*

சாலை போட முடியாமலேயே இருக்கிறது. அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அந்தச் சாலை நாளுக்கு நாள் மிகவும் மோசமாகிக் கொண்டே வருகிறது. சாதாரணமாக லேசான மழை பெய்தாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அதைக் கருத்தில்கொண்டு, மிக முக்கியமாக பஸ் ஸ்டாண்டிலிருந்து துருகம் செல்கின்ற சாலையையும் மற்றும் பஸ் ஸ்டாண்டிலிருந்து சின்ன சேலம் செல்கின்ற சாலையையும் சீரமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்வது, முழுக்க முழுக்க உண்மையான செய்திதான். ஏற்கெனவே, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தில் கள்ளக்குறிச்சி நகரம் இணைக்கப்பட்டிருந்தது. NHAI மூலமாகப் போடப்பட்ட புறவழிச் சாலை ஒன்று உளுந்தூர்பேட்டையில் இருந்து சேலம் வரை செல்கிற காரணத்தினால், 8 இடங்களில் ஏற்கெனவே இருக்கின்ற சாலைகள் சீர்செய்யப்படாமல் இருந்தன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், உளுந்தூர்பேட்டை, எலவனசூர்கோட்டை, கள்ளக்குறிச்சி, ஆத்தூர் என 8 இடங்களில் புறவழிச் சாலை செல்கின்ற காரணத்தால், ஏற்கெனவே உள்ளேயிருக்கிற சாலைகள் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் சரி செய்யப்படாமல் இருந்தன. ஒரு வார காலத்திற்கு முன்னால் நான் நேரடியாக டெல்லிக்குச் சென்று ஒன்றிய அரசினுடைய சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் மாண்புமிகு திரு. நிதின் கட்கரி அவர்களைப் பார்த்து, இதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, கள்ளக்குறிச்சி, மாவட்டத் தலைநகரமாக இருக்கிறது. எனவே, அந்தச் சாலையைச் சீர் செய்ய வேண்டும் என்று அவர்களிடம் கடிதம் கொடுத்தேன். இந்த மாதத்திலேயே சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரை டெல்லியிலிருந்து அனுப்பி, அது மாவட்டத் தலைநகரமாக இருக்கின்ற காரணத்தால், அதற்கு முன்னுரிமை அளிக்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன; இது ஒன்று.

2023 ஜனவரி 13]

மற்றொன்று, முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், புறவழிச் சாலை அமைப்பதற்கு திட்டங்களெல்லாம் தீட்டப்பட்டு, அனுமதி பெற்றுவிட்டதாகச் சொன்னார்கள். அது தவறு. ஏற்கெனவே கச்சிராப்பாளையம், சங்கராபுரம் ஆகியவற்றை NHAI *உடன் இணைப்பதற்கு இப்போதுதான் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்கின்ற பணியில் துறை இறங்கியிருக்கிறது.* DPR *தயார் செய்யப்பட்டு,* alignment *எல்லாம் பார்த்த பிறகுதான், திட்ட மதிப்பீடு தயார் செய்யப்படும். நியாயமாக வர வேண்டிய புறவழிச் சாலைதான் அது. அதற்கு இந்த அரசு முயற்சிகள் செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர்-கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். மாநில நெடுஞ்சாலைத் துறை அந்தப் பணிகளை எடுத்து செய்து வருகிறது. அதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மிக முக்கியமாக, அரியலூரில் இருக்கக்கூடிய அழகியமணவாளத்திலிருந்து மேலராமநல்லூர் வரை கொள்ளிடத்தில் பாதி தூரம் வரை பாலத்தை 5 ஆண்டுகளுக்கு முன்பு கட்டி முடித்துவிட்டார்கள். மேலராமநல்லூரிலிருந்து பாபநாசம் வரை, அதாவது, தஞ்சை மாவட்டத்திலுள்ள கிராமங்களை இணைப்பதற்காக மீதிப் பாலத்தைக் கட்ட வேண்டும். இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டால் அரியலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பல்வேறு கிராமங்கள், குறிப்பாக, வெள்ளம், பெருவெள்ளம், மழை ஏற்படும்போது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாக முடித்துவிடுகிறேன்.*

[2023 ஜனவரி 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், விளக்கம் தேவையில்லை. என்ன வேண்டும்? அதைக் கேளுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *கேட்கிறேன், கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், வெள்ளம் வரும்போது வாய்க்கால் வேண்டுமா, சாலை வேண்டுமா என்பதைக் கேளுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *இல்லை, இல்லை. பாலம் வேண்டும். வெள்ளம் வரும்போது, அந்தப் பகுதி மக்கள் தீவில் வாழ்வது போன்றிருக்கும் சூழ்நிலையில், மேலராமநல்லூரிலிருந்து பாபநாசம் தொகுதியிலுள்ள மேட்டுத்தெரு வரை. . .*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மீதி பாலம் கட்டித் தரப்படுமா என்று கேட்கிறீர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மீதி பாலம் கட்டி முடிக்கப்பட்டால் கும்பகோணத்திலிருந்து பாபநாசம் வரை செல்லக் கூடிய அந்தப் பாதை சுமார் 15 கிலோ மீட்டர் குறையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மாநில போக்குவரத்துக் கழகத்திற்கு* Diesel-*ஐ மிச்சப்படுத்தக்கூடியதாகவும், மக்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்தரக்கூடிய ஒன்றாகவும் இருக்கும். எனவே, மேலராமநல்லூரிலிருந்து பாபநாசத்திலிருக்கக்கூடிய மேட்டுத்தெரு வரை அந்தப் பாலத்தைக் கட்டி முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தோழமை கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள் ஏற்கெனவே சட்டமன்றத்தில் பேசுகிறபோது அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு, அரியலூர் மாவட்டத்தையும் தஞ்சாவூர் மாவட்டத்தையும் இணைக்கிற மேலராமநல்லூர் பாலம் என்பது, ஓர் அத்தியாவசியமான பாலம். எனவே, அரசின் சார்பில்*

2023 ஜனவரி 13]

அதனை உணர்ந்த காரணத்தினால், 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாலம் அமைப்பதற்காக தற்போது திட்ட மதிப்பீடு தயார் செய்து கொண்டிருக்கிறோம். அது முடிந்தவுடன், அந்தப் பாலம் கட்டாயம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு முதல் கோபிசெட்டிப்பாளையம் வரையிலும் நான்குவழிச் சாலை அமைக்கும் பணிகள் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நான்குவழிச் சாலை அமைந்தவுடன் நகராட்சிப் பகுதிகளில் வணிக மையங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் இருக்கின்ற காரணத்தால், அதனை விரிவுபடுத்த முடியவில்லை. ஆகவே, முந்தைய ஆட்சிக் காலத்தில் அதற்காக புறவழிச் சாலை ஒன்றை அமைப்பதற்காக ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகளை மிக விரைவில் நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இதுகுறித்து என்னிடம் வெளியிலே வலியுறுத்திக் கேட்டார்கள். இதுபற்றி நானும் அறிவேன். இது அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. எவ்வளவு விரைந்து செய்து முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாகச் செய்து முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 6 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. 6 சட்டமன்றத் தொகுதிகளிலும்,*

[*2023 ஜனவரி 13*

என்னுடைய கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி உட்பட, பயணியர் தங்கும் விடுதி கிடையாது. இங்கு முக்கியமானவர்கள் நிறைய பேர் வந்து செல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் அவர்களும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பயணியர் விடுதி என்றால் முக்கியமானவர்கள்தான் வந்து தங்குவார்கள். மாண்புமிகு உறுப்பினர், தங்கும் விடுதி அமைக்கப்படுமா என்பதை மட்டும் கேட்டு அமருங்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணியர் தங்கும் விடுதி அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக்கு தொகுதி ஆய்வு மாளிகை அல்லது சுற்றுலா மாளிகை அமைப்பது என்பது அரசினுடைய விதியில் இல்லை. பொதுவாக, மாவட்டத் தலைநகரங்கள், தாலுகா தலைநகரங்கள் போன்ற இடங்களில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், தாலுகா தலைநகரங்கள் மற்றும் மாவட்ட தலைநகரங்களில்தான் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் வருவது, தங்குவது அல்லது மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வருவது, சட்டமன்ற உறுப்பினர்கள் வருவது என்பது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அவர் சொல்வது மாவட்டத் தலைநகரமும் இல்லை. அடுத்த மாதம் நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருவதாக இருக்கிறேன். ஒருவேளை அது தாலுகா தலைநகரமாக இருக்குமேயானால், அங்கே வருகிறபோது நேரடியாக நானே அவசியம் வந்து பார்க்கிறேன். அவசியம் இருக்குமேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கே அதனை அமைப்பதற்கான முயற்சியைச் செய்வேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.*

2023 ஜனவரி 13]

திரு. ஜோசப் சாமுவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாடிக்குப்பம் இரயில் நகர் மற்றும் பூந்தமல்லி நெடுஞ்சாலையை இணைக்கும் சிதிலமடைந்திருக்கும் தரைப் பாலத்தை அகற்றி உயர்மட்ட பாலமாக அமைக்க நில எடுப்பிற்கு நிருவாக ஒப்புதல் ரூ.2 கோடிக்கு பெறப்பட்டுள்ளது என அறிகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்ட சிதிலமடைந்த இந்தத் தரைப் பாலத்தை உயர்மட்ட பாலமாக அமைக்க இந்த ஆண்டே அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல முறை நான் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். தரைப் பாலங்களை எல்லாம் உயர்மட்ட பாலங்களாக ஆக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து, இந்த ஐந்தாண்டு காலத்தில் அவற்றை முடித்துவிட வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டு, இந்த நிதியாண்டில் பல பாலப் பணிகளை எடுத்திருக்கிறோம். எஞ்சியிருக்கிற ஏறத்தாழ 400 தரைப் பாலங்களை உயர்மட்ட பாலங்களாக ஆக்க வேண்டியுள்ளது. அதில் ஒரு பாலமாகத்தான் இது இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்த நிதியாண்டிலே அதனையும் சேர்த்துக் கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

வர்த்தக மையம்

***22025—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—